பக்கங்கள்:-15

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 04 | வெள்ளிக்கிழமை | 20.09.2024 | அதிர்வு 049

## டிப்பர் வாகனம் மோதி இளைஞர் உயிரிழப்பு!

**கிளிநொச்சியில் துயரம்**

கிளிநொச்சியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வட்டக்கச்சி, பன்னங்கண்டி பாலத்துக்கு அருகில் நேற்று 06

**ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றவா?**

# விசேட கண்காணிப்புக் குழுவைப் பணியில் ஈடுபடுத்தியது மனித உரிமை ஆணைக்குழு




இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் முறைகேடுகள் இடம்பெறுவதைத் தடுக்கும் நோக்கில் நாடளாவிய ரீதியில் நிறுவப்பட்டுள்ள வாக்குச் சாவடிகளில் விசேட கண்காணிப் புப் பணிகள் முன்னெடுக்கப் படவுள்ளன.

அது மாத்திரமன்றி தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர் உள்நாட்டு மற்றும் சர்வதேச தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் கடந்த ஒரு மாதகாலமாக தேர்தல் வன்முறைகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் வலுவான கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றன. 06

## யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தேர்தல் ஏற்பாடுகள் பூர்த்தி

**4 இலட்சத்து 92 ஆயிரத்து 280 பேர் வாக்களிக்கத் தகுதி**




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று மாவட்ட தெரிவித்தாட்சி அலுவலரும் பதில் மாவட்ட செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 4 இலட்சத்து 92 ஆயிரத்து 280 வாக்காளர்களும். கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 907 வாக்காளர்களுமாக யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 06




இந்த ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களுக்கு ஆள்களை சப்ளை பண்ணும் மனிதவலு ஏஜென்ஸிகள் தெற்கில் தாராளமாக இயங்கின. அந்த பிஸினஸ் இம்முறை வடக்கிலும் காலூன்றி விட்டமை நாம் அறிந்ததுதான்.

ஆடு, மாடு பண்ணை வைத்திருப்பவர்களை நமக்குத் தெரியும். எருவுக்காக ஒரு மந்தையை வயலில் ஒரு நாளைக்கு இரவில் அடைத்து வைத்திருந்தால் அதற்குக் கால்நடைக்கு இவ்வளவு என்று கட்டணம் கொடுப்பார்கள். அந்த கால்நடைகளின் சாணம் அல்லது புழுக்கை, மூத்திரம் எல்லாம் அந்த மண்ணுக்கு உரமாகும். அதனால் விதைப்புக்கு முந்திய காலத்தில் இப்படி மந்தை அடைப்புக்கு மவுசு அதிகம்.

அதுவேதான் தேர்தலிலும். 06




# தம் வாக்காளர் அட்டைகளை தபால் நிலையத்தில் பெறலாம்

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் ஒரு நாளே உள்ளது. இந்தத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் தபால் நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

எனினும் இதுவரை உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்களுக்கு பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க அறிவித்தலொன்றை விடுத்துள்ளார்.

இதன்படி, தேர்தல் நடைபெறும் தினம் வரை வாக்காளர்கள் தமது பிரதேசத்திலுள்ள தபால் நிலையத்துக்குச் சென்று வாக்காளர் அட்டைகளை பெற்றுக் கொள்ள முடியுமென அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளில் சுமார் 97 சதவீதம் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.



# தேர்தல் சமயத்தில் அனர்த்தங்கள் ஏதும் நேர்ந்தால் எதிர்கொள்வதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தயார்

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் வாக்குப்பதிவு காலத்தின் போது எதிர்பாராத வானிலை மாற்றங்கள் காரணமாக ஏற்படும் அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன் அனர்த்த நிலைமைகள் ஏற்படக்கூடும் என சந்தேகிக்கப்படும் மாவட்டங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அதன் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இன்று முதல் மூன்று மணி நேரத்திற்கு ஒருமுறை வளிமண்டலவியல் திணைக்களத்திடம் இருந்து வானிலை அறிக்கை பெறப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, அனர்த்தங்கள் காரணமாக ஜனாதிபதி தேர்தலுக்கு ஏற்படக்கூடிய இடையூறுகளை நிர்வகிப்பதற்கான விசேட கூட்டு வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு ஆகியன திட்டமிட்டுள்ளன.

அதன்படி நேற்று முதல் எதிர்வரும் 22ஆம் திகதி வரை இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# சமூக வலைத்தளங்கள் ஊடாக பிரசாரங்களில் ஈடுபடுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை!

## பொலிஸார் அறிவிப்பு




தேர்தல் பிரச்சாரங்களுக்காக வழங்கப்பட்ட கால அவகாசத்தின் பின்னர் சமூக வலைத்தளங்கள் ஊடாக தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொள்பவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்தூவ தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலத்தில் தேசிய பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கும் வகையில் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துபவர்களுக்கு எதிராகவும் சட்டம் அமுல்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தபால் மூல வாக்குகள் எண்ணும் பணி மாலை 4.15 மணியளவில் ஆரம்பமாகும்

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

"ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்குகள் எண்ணும் பணி நாளை மாலை 04.15 மணியளவில் ஆரம்பமாகும். எண்ணி முடிக்கப்பட்ட பின்னர் உரிய முடிவுகளை ஊடகங்களுக்கு வழங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன."

– இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.




அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பிரதான வாக்குகளை எண்ணும் பணிகள் இரவு 7 மணிக்கு ஆரம்பிக்கப்படும். உத்தியோகபூர்வ முடிவுகள் கிடைக்கும் வரை உத்தியோகபூர்வமற்ற முடிவுகளை வெளியிடுவதைத் தவிர்க்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

விரும்பும் வேட்பாளருக்கு வாக்களிக்க, வேட்பாளரின் பெயர் மற்றும் சின்னத்தின் முன் பகுதியில் '1' என்ற எண்ணைக் குறிக்க வேண்டும்.

'2' மற்றும் '3' என்ற எண்களை குறியிட்டு, தனக்கு விருப்பமான மற்ற வேட்பாளர்களுக்கு இரண்டாவது மற்றும் மூன்றாவது முன்னுரிமை அளிக்கலாம்."– என்றார்.

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## வல்லிபுரம் சிவஞானம்

(முன்னாள் பிரதேச சபை உறுப்பினர், வலிகாமம் கிழக்கு - கோப்பாய்)

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 28.05.1950 | 19.09.2024 |

'முரசு' இணைய நாளிதழின் உதவி ஆசிரியர் சிவஞானம் ஜெயானந்தனின் தந்தை வல்லிபுரம் சிவஞானம் நேற்று காலமானார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திக்காகவும் பிரார்த்தனை செய்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

- 'முரசு' குழுமம்.




# நல்லூரில் திலீபனின் அஞ்சலி நிகழ்வுகளை நடத்துவதற்குத் தடை விதிக்க மன்று மறுப்பு

யாழ். நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்வை நடத்த நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த விடயம் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம்விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே யாழ். நீதிபதி ஏ.ஆனந்தராஜா இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

எனினும் ஒலிபெருக்கிகளை பயன்படுத்த அனுமதி வழங்கும் அதிகாரம் பொலிஸாரிடம் இருப்பதால் இது தொடர்பில் அவர்களே இறுதி முடிவை எடுக்கலாம் எனவும் நீதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

திலீபனின் நினைவிடத்திற்கு உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரும் நிலையில்,இந்தநினைவேந்தல்களுக்கு தடை விதிக்கக் கோரி பொலிஸார் நீதிமன்றத்தை அணுகியிருந்தனர்.

வழக்கு நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்ட போது எதிராளிகளில் ஒருவரான சட்டத்தரணி மணிவண்ணன் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தார். எனினும் இந்த வழக்கில் மற்றொரு எதிராளியாகக் குறிப்பிடப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், கிளிநொச்சியில் உள்ள வழக்கொன்றுக்காகச் சென்றமையால் இந்த வழக்கில் அவரால் கலந்து கொள்ள முடியவில்லை.

எதிராளிகள் தரப்பில் மூத்த சட்டத்தரணி சிறீகாந்தா தலைமையில் சட்டத்தரணிகள் திருக்குமரன், மகிந்தன், றமணன், றிசிகேசன், கௌதமன் உள்ளிட்டவர்கள் நீதிமன்றில் முன்னிலையானார்கள்.

இவ்வழக்கில் இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி ஏ.ஆனந்தராஜா, 2011ஆம் ஆண்டு சின்னங்களைப் பயன்படுத்த தடை விதித்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டமையைச் சுட்டிக் காட்டினார்.

எனினும் இறந்தவர்களின் நினைவேந்தல் நடத்த தடை இல்லை. இதன் பின்னர் 13 வருடங்களாக மக்கள் நினைவேந்தலை அனுஷ்டித்து வருகின்றனர்.

அவற்றைத் தடுப்பதற்கு ஜனாதிபதியோ, பாதுகாப்பு அமைச்சோ, நாடாளுமன்றமோ எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்நிலையில், அஞ்சலி நிகழ்வுகளை நடத்தத் தடை விதிக்க வேண்டும் எனப் பொலிஸார் கோரிக்கை விடுத்து வருவதை ஏற்க முடியாது எனத்தெரிவித்தார்.

இதேவேளை தேர்தல் காலம் என்பதால், அதைக் கருத்திற்கொண்டு அஞ்சலிக்குத் தடை விதிக்கவேண்டும் என்றும் பொலிஸார் கோரினார்கள்.

இதற்கு, தேர்தல் காலத்தின்போது வாகனப் பேரணிகள் நடத்துவதற்கு மட்டுமே தடை விதிக்க முடியும் என்று தெரிவித்த நீதிவான், அவ்வாறு வாகனப் பேரணிகள் இடம்பெறாது என்பதற்கான உத்தரவாதங்களை எதிர்த்தரப்பினரிடம் இருந்து பெற்றுக்கொண்டார். அத்துடன் வழக்கை நீதிவான் முடிவுறுத்தினார்.

# திலீபன் ஆவணக் காட்சியகம் இன்று நல்லூரில் திறப்பு விழா

தியாக தீபம் திலீபனின் வரலாற்றினை எதிர்கால சந்ததியினருக்கு கடத்தும் முகமாக அவரின் வரலாற்றினை எடுத்தியம்பும் “பார்த்திபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக!!” எனும் தொனிப்பொருளுடன் கூடிய ஆவணக் காட்சியகம் இன்றைய தினம் திறந்து வைக்கப்படவுள்ளது.

நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபன் நினைவாலயம் முன்றிலில் தியாக தீபம் திலீபன் நினைவுச் சதுக்கம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் மாவீரர் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் திறந்து வைக்கப்படவுள்ளது.

தியாக தீபம் திலீபனின் வரலாற்றுப் படங்கள் இதன்போது தொகுக்கப்பட்டு காட்சிப்படுத்தப்படவுள்ளன.

# கெஹலியவின் மகனுக்குச் சொந்தமான 2 சொகுசு வீடுகளை பயன்படுத்தத் தடை

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் மகன் ரமித் ரம்புக்வெல்லவுக்கு சொந்தமான இரு சொகுசு வீடுகளைப் பயன்படுத்தத் தடை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழு விடுத்த கோரிக்கையைப் பரிசீலித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன, இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

ரமித் ரம்புக்வெல்ல கொள்ளுப்பிட்டி பகுதியில் உள்ள சொகுசு வீடமைப்புத் தொகுதியில் இரு வீடுகளை தலா 80 மில்லியன் ரூபா மற்றும் 65 மில்லியன் ரூபாவுக்கு கொள்வனவு செய்துள்ளார் என லஞ்ச, ஊழல் தடுப்பு ஆணைக்குழு நீதிமன்றில் தெரிவித்திருந்தது.

இது தொடர்பாக விசாரணை நடத்தி சொத்துக்குவிப்பு தடை உத்தரவு பிறப்பிக்கப்படும் என லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழு நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்தது.



இந்த கோரிக்கையைப் பரிசீலித்த உயர்நீதிமன்ற நீதிபதி, டிசம்பர் 19 ஆம் திகதி வரை சம்பந்தப்பட்ட சொத்துக்குத் தடை விதித்து உத்தரவு பிறப்பித்தார்.

# வாக்குச் சீட்டைப் படம் பிடித்து சமூக ஊடகங்களில் ஏற்றத் தடை

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்காளர் ஒருவர் தமது வாக்கை செலுத்தியதன் பின்னர் அதனை கையடக்க தொலைபேசியில் படம் எடுத்தல், காணொளிகளை பதிவுச்செய்தல் மற்றும் அவற்றை சமூக ஊடகங்களில் பதிவிடுவதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான செயல்கள் சட்ட விரோதம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், வாக்கைச் செலுத்தியதன் பின்னர், தாம் வாக்களித்த வேட்பாளரின் பெயரை வாக்களிப்பு நிலையத்திற்கு வெளியில் வந்து கூறுவது தேர்தல் சட்டத்திற்கு முரணானதாகும்.

எனவே, இந்த விடயங்கள் வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் வாக்கு எண்ணும் மையங்களில் தவிர்க்கப்பட வேண்டும் என அவர் அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், வாக்களிப்பு நிலையத்தில் புகைபிடித்தல் மற்றும் மது அருந்துதல் அல்லது போதைப்பொருள் பாவனையுடன் வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்வது சட்டவிரோதமானது எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.



# தேர்தலுக்கான ஆவணங்களை விநியோகிக்கும் பணிகள் இன்று

வாக்கு பெட்டிகளையும், வாக்குச் சீட்டு உள்ளிட்ட ஜனாதிபதித் தேர்தலுக்கான சகல ஆவணங்களையும் விநியோகிக்கும் பணிகள் இன்று காலை முதல் இடம்பெறவுள்ளன.

மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சிவசுப்பிரமணியம் அச்சுதன் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அத்துடன் வாக்களிப்பதற்காக வாக்குச் சாவடிக்குச் செல்லும்போது, அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களை எடுத்துச் செல்லுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு வாக்காளர்களிடம் கோரியுள்ளது.

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 8 பேர் சிக்கினர்!

வடக்கு மற்றும் கிழக்கு கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை, ஜின்னாபுரம் மற்றும் முல்லைத்தீவு கடற்பரப்பில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் போது அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதானவர்கள் 17 முதல் 45 வயதுகளுக்கிடைப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகப் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாக்களிப்புக்கு முந்திய பிரசார காலத்தில் கூட்டங்களுக்கு மனித மந்தை சேர்த்து நிறைப்பது ஒரு வருமானம் தரும் நல்ல பிஸினஸ் என்றாகி விட்டது.

அங்கு ஆடு, மாடு மந்தை. இங்கு மனித மந்தை. அங்கு விதைப்புக்கு முன். இங்கு வாக்களிப்புக்கு முன். அவ்வளவுதான் வித்தியாசம்.

இது, யாழ்ப்பாணத்தில் சில தினங்களுக்கு முன்னர் நடந்த மந்தை அடைப்புப் பற்றிய சுவாரஸ்யமான ஒரு தகவல்.

அந்த இரு அணிகளும் ஒரே கட்சியைச் சார்ந்தவை. ஆனால் இப்போது வெவ்வேறு தரப்புகளுக்காகக் களம் இறங்கி இருப்பவை.

ஒரு தரப்பின் கூட்டம் நல்லூரில். மற்றத் தரப்பின் ஏற்பாடு அதே நாளில் – அதே மாலையில் – வட்டுக்கோட்டையை அண்டி.

கூட்டத்துக்குப் பிரசன்னமாக்க ஒரு தரப்பு சாவகச்சேரியை அண்டிய பகுதியில் மனித மந்தையை – சுமார் நூறு பேர் வரை – திரட்டி வந்து, பிரதான வீதியை அண்டி நிறுத்தி இருந்தது. ஏற்றிச் செல்ல பஸ் வரும் என்று வழி காட்டலும் கூறப்பட்டிருந்தது. முதலில் வெறுமையாக அந்தப் பக்கம் வந்ததோ மற்றத் தரப்பினுடைய பஸ். வீதியோரத்தில் ஆள்களைப் பார்த்ததும், வந்த பஸ் நிற்க, இந்தத் தரப்பு அதில் ஏறிவிட்டது. வட்டுக்கோட்டைப் பயணம் கிட்டுப் பூங்காவில் முடிந்து விட்டது.

என்ன, எதிரணிக் கூட்டத்துக்கு இந்த தரப்பு மந்தை சேர்த்துக் கொடுத்த விவகாரமாகி விட்டது விடயம். தங்கள் கூட்டத்துக்கு மந்தையை நிரப்ப முடியாத ஆத்திரம் வேறு அவர்களுக்கு.

முற்கூட்டியே உரிய பணம் பட்டுவாடா செய்யப்பட்டு விட்டதால் அதையும் வெட்ட முடியவில்லை என்று ஆதங்கம் வேறு என ஒரு பேச்சடிபட்டது. ஆயினும், அது பற்றிய விவரம் எனக்கு முழுமையாக தெரியாது.

\+ + +

யாழ்ப்பாணம் குடாநாட்டில் 12 வயதுச் சிறுமி ஒருவரின் பெயர் வாக்காளர் பட்டியலில் பதியப்பட்டு, வாக்காளர் அட்டையும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் அதிக மக்கள் தொகை கொண்ட கோப்பாய் தொகுதியிலேயே இவ்வாறு சிறார் ஒருவரின் பெயருக்கு வாக்காளார் அட்டை விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

தாய், தந்தை இருவரின் வாக்காளர் அட்டையுடன் இந்தச் சிறாரின் பெயரிலும் வாக்காளர் அட்டை விநியோகிக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டில் பிறந்த 12 வயதுச் சிறுமியின் பெயர் எவ்வாறு வாக்காளர் பட்டியல் வரை சென்று வாக்காளர் அட்டை விநியோகம் வரையில் வந்துள்ளது என்பது தொடர்பில் இப்போது ஆராயப்படுகின்றதாம்....!

## யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

5 இலட்சத்து 93ஆயிரத்து 187 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 511 வாக்கெடுப்பு நிலையங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 108 வாக்கெடுப்பு நிலையங்களும் என மொத்தம் 619 வாக்கெடுப்பு நிலையங்கள் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ளன என்றும் அவர் கூறினார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் யாழ்ப்பாணம் மாவட்ட தெரிவித்தாட்சி அலுவலரும் பதில் மாவட்ட செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் மேலும் தெரிவிக்கையில்,

“வாக்களிப்பு நிலையத்தில் செப்டெம்பர் 21 ஆம் திகதி காலை 7 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பிக்கப்படும். பிற்பகல் 4 மணிக்கு வாக்களிப்பு நிலைய வரிசையில் தரித்து நிற்கின்ற வாக்காளர்களுக்கு வாக்குச்சீட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை, பிற்பகல் 4 மணிக்குப் பின்னர் வாக்களிப்பு நிலையத்தினுள் உட்பிரவேசிக்க இடமளிக்க முடியாது.

தெல்லிப்பழையைச் சொந்த இடமாகக் கொண்டு பருத்தித்துறையில் தற்காலிகமாக வசித்து வருகின்றவர்களை வியாபாரிமூலையிலிருந்து தெல்லிப்பழையில் வாக்களிப்பதற்குப் போக்குவரத்து பஸ்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் கடமைக்காக 8 ஆயிரத்து 232 உத்தியோகத்தர்களும், 2 ஆயிரத்து 100 பொலிஸாரும் கடமையில் ஈடுபடவுள்ளனர்.

இலங்கை போக்குவரத்துச் சபை மூலம் 42 பஸ்களும், தனியார் போக்குவரத்துச் சங்கம் மூலம் 132 பஸ்களும் தேர்தல் கடமைகளுக்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு வாக்குப் பெட்டி, வாக்குச் சீட்டு இதர ஆவணங்கள் விநியோகித்தல் நடவடிக்கைகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நாளை (இன்று) வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முதலாவது பஸ் காலை 8.30 மணியளவில் புறப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு பகுதிகளுக்கு வாக்குப் பெட்டிகளைக் கொண்டு செல்லவும் எடுத்து வரவும் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. நெடுந்தீவில் வாக்களிப்பு நிறைவடைந்த பின்னர் வாக்குப் பெட்டிகள் ஹெலி மூலம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்குக் கொண்டுவரப்படும்.

வாக்கெண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பெறுபேற்றைத் தயாரித்து வெளியிடும் நிலையம் அமைக்கப்படும். யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள 511 வாக்களிப்பு நிலையங்களினதும் வாக்குகளை எண்ணுவதற்காக 41 வாக்கெண்ணும் நிலையங்களும், அஞ்சல் வாக்குகளை எண்ணுவதற்காக 14 வாக்கெண்ணும் நிலையங்களுமாக மத்திய கல்லூரியில் 55 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.” – என்றார்.

## விசேட கண்காணிப்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறானதொரு பின்னணியில் தேர்தல் தினமான நாளையும், வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் நாளைமறுதினமும்தமது குழுவினரை விசேட மனித உரிமைகள் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தியிருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இவ்விரு நாட்களும் நாடளாவிய ரீதியில் எந்தவொரு இடத்திலேனும் அடிப்படை உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்று அறியக் கிடைத்தால், மேற்குறிப்பிட்ட பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள குழு அவ்விடத்துக்கு விஜயம் செய்து, நிலைமைகளை ஆராய்ந்து உரிய தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்.

எனவே, ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் காலப்பகுதியில் அதனுடன் தொடர்புடைய வகையில் எங்கேனும் அடிப்படை உரிமைகள் மீறப்படும் பட்சத்தில், அது குறித்து 076 7914695 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாகத் தொடர்பு கொண்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள குழுவுக்கு அறிவிக்க முடியும்.

## டிப்பர் வாகனம் மோதி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வியாழக்கிழமை இடம்பெற்ற விபத்தில், அப்பகுதியைச் சேர்ந்த அல்பிரட் அனுசன் (வயது 22) எனும் இளைஞரே உயிரிழந்துள்ளார்.

டிப்பர் வாகனம் மோதியே மேற்படி இளைஞர் உயிரிழந்துள்ளார்.

டிப்பர் சாரதியைக் கைது செய்த கிளிநொச்சி பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# நாடு முழுவதிலும் விசேட பாதுகாப்பு; 63 ஆயிரம் பொலிஸார் கடமையில்!

தேர்தலுக்கான பாதுகாப்பு நடவடிக் கைகளுக்காக நாடு முழுவதிலும் 63 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனப் பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அத்துடன், வீதிகளில் அமைக்கப்பட் டுள்ள தற்காலிக காவலரண்களில் 3,250 விசேட அதிரடிப்படையினர் கடமையில் ஈடுபடவுள்ளனர்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் ஒன்று கூடல்களை நடத்துவது மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கு எதிராகக் கடுமை யான நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாடு முழுவதிலும் ஒட்டப்பட்டுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பான சுவரொட்டிகளை அகற் றும் பணிகள் தற்போது ஆரம்பிக் கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

# 5ஆயிரத்தை நெருங்கும் தேர்தல் முறைப்பாடுகள்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு இதுவரையில் 4,945 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதன்படி, தேசிய தேர்தல் முறைப் பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 1,516 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்கு 3,429 முறைப்பாடுக ளும் கிடைக்கப் பெற்றுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 4,804 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



# தேர்தலை முன்னிட்டு மேலதிக பஸ் சேவை

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப் பதற்காகச் சொந்த இடங்களுக்குச் செல்லும் மக்களுக்காக மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வுள்ளன என இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, நேற்று மற்றும் இன்றும் இவ்வாறு மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன எனத் தெரி விக்கப்படுகிறது. கொழும்பு மத்திய பஸ் நிலையத்திலிருந்து இந்த பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

# தகாத உறவில் ஈடுபட்ட மனைவியின் கையை வெட்டிய கணவன் கைது



தகாத உறவில் ஈடுபட்ட தனது மனைவியின் கையை இரண்டாக வெட்டி எடுத்த கணவன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ். தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் சந்தேகநபரான கணவன் யாழ். அளவெட்டி பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான கணவனின் ஒரு கை போரில் ஏற்பட்ட விபத்தில் துண்டிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சந்தேகநபரின் மனைவி மற்றுமொரு நபருடன் நீண்டகாலமாக தகாத உறவில் ஈடுபட்டு வந்துள்ளதுடன் சந்தேகநபரான கணவன் இது தொடர்பில் தனது மனைவிக்குப் பல தடவைகள் எச்சரிக்கை விடுத்து வந்துள்ளார்.

சம்பவ தினத்தன்று சந்தேகநபரின் மனைவி வீட்டின் அறைக்குள் இருந்து இரகசியமாக தனது கள்ளக்காதலனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டிருந்துள்ள நிலையில் அதனை அவதானித்த கணவன் தனது மனைவியின் கையைக் கத்தியால் இரண்டாக வெட்டி எடுத்துள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த 41 வயதுடைய மனைவி தெலிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தெல்லிப்பழை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# நாளையும் நாளை மறுதினமும் மதுபானசாலைகளுக்கு பூட்டு

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு நாளை மற்றும் நாளை மறுதினம் நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படவுள்ளன என கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு அமைய, மதுபானசாலைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கலால் திணைக்கள ஆணையாளர் நாயகம் எம்.ஜீ.குணசிறி தெரிவித்துள்ளார்.

# கண்ணீர் காணிக்கை



மண்ணில்
28.05.1950

விண்ணில்
19.09.2024

அமரர்
## வல்லிபுரம் சிவஞானம்
(முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்,
வலிகாமம் கிழக்கு - கோப்பாய்)

பாரபட்சம் பாராது பழகும்
உங்கள் ஒளிவீசும் முகம்
இருள்கொண்டு போனதேனோ?
உங்கள் நேரம் இதுவென்று
காலன் குறித்துவிட்டானோ!
உங்கள் பிரிவுவைத் தாங்க முடியாது
தவித்து நிற்கின்றோமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

- குடும்பத்தினர் -
சர்வோதய வீதி, ஆவரங்கால்



## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கனிமங்களுக்கு உரிமை

சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான மூலோபாயப் போட்டி தீவிரமடைந்துள்ள நிலையில், ஏற்கனவே இந்தச் சிக்கலில் நடுவில் மாட்டிக் கொண்டு தவிக்கும் இலங்கை, இப்போது புதிய சவாலை எதிர்கொள்ளும் நெருக்கடிக்குள் சிக்கியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையை ஒட்டிய கடற் பிராந்தியத்தின் கோபால்ட் இருப்புப் பகுதியை மையமாகக் கொண்ட புதிய புவிசார் அரசியல் சவாலை இலங்கை எதிர்கொள்கின்றது என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மத்திய இந்தியப் பெருங்கடலில் கோபால்ட் நிறைந்த ஃபெரோமாங்கனீஸ் மேலோடுகளை ஆராய்வதில் இந்தியா அதிகம் கரிசனை காட்டுகின்றது.

இதற்காக ஜமைக்காவைத் தளமாகக் கொண்ட சர்வதேச கடற்பரப்பு ஆணையத்திடம் இந்தியா விண்ணப்பித்தபோது, சீன - இந்தியப் போட்டிக்கு ஒரு புதிய பரிமாணம் வெளிப்பட்டது என விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்தியப் பெருங்கடலில் கோபால்ட் கனிமம் நிறைந்தவை எனக் கருதப்படும் அஃபனசி நிகிடின் கடற் குன்றுகளை ஆராய்வதற்கு சர்வதேச கடற்பரப்பு ஆணையத்திடம் அனுமதி கோரி ஜனவரி 2024 இல் இந்தியா விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தது. ஆனால் அந்த பிரதேசம் இலங்கையின் கண்டத்தின் அடுக்குப் பகுதியில் இருப்பதால் இந்தியாவின் விண்ணப்பத்தை நிறுத்தி வைக்க ஆணையம் முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

பாரம்பரியமான கருத்தோட்டத்தில் இந்தியப் பெருங்கடலைத் தனது கொல்லைப் புறமாகவே கருதும் இந்தியா, அங்கு சீனாவின் பிரசன்னத்தைத் தனது பாதுகாப்புக் கவலையாகவே கொள்கின்றது. அது புரிந்து கொள்ளத் தக்க விடயம்தான். அந்தப் பிரசன்னத்துக்கு இலங்கை போன்ற சிறிய நாடுகளை சீனா தனது பினாமிகளாக மாற்றி இந்தியாவுக்கு எதிரான கைவரிசைக்குப் பயன்படுத்துகின்றது எனப் புதுடில்லி கருதுகின்றது.

2009 ஆம் ஆண்டு முதல், இந்தியப் பெருங்கடலை ஒட்டிய துறைமுகங்களில் முதலீடு செய்வதன் மூலமும், கடற்கொள்ளை எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக நேரடியாக நீர்மூழ்கிக் கப்பல்களைப் பயன்படுத்துவதன் மூலமும், ஆய்வு மற்றும் கடல்நீரியல் வரைபடங்களைத் தயாரித்தல் என்ற பெயரில் கப்பல்களை அனுப்புவதன் மூலமும் இந்தக் கடற் பிராந்தியத்தில் தனது இருப்பை சீனா வலுப்படுத்தியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

சீன ஆய்வுக் கப்பலான ‘சியாங் யாங் ஹாங் 03’ வங்காள விரிகுடா, அரபிக் கடல் மற்றும் இந்தோனேசியாவின் மேற்கே உள்ள கடல் பகுதிகளில் 2019 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறது. நீர்வாழ் சூழலை ஆய்வு செய்வதற்காக இந்தியப் பெருங்கடலில் நீருக்கடியில் ஆளில்லா கடல் விமானக் கலங்களை சீனா அனுப்பியுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

இந்தியா அதன் தேசிய நலன்களால் உந்தப்பட்டு இந்தியப் பெருங்கடலில் கனிம ஆய்வில் தனது முதன்மையான ஆர்வத்தைக் காட்டினாலும், உண்மையில் இப்பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கை அது புறக்கணிக்கவோ பார்த்திருக்கவோ முடியாது என்பதும் வாஸ்தவம்தான்.

உலகில் வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதாரத்தை இந்தியா கொண்டுள்ளது. தனது வளர்ச்சியைப் போஷிக்கவும், அதன் தொழில்நுட்பத் துறையை வலுப்படுத்தவும் மற்றும் போட்டி மதிப்புச் சங்கிலியை உருவாக்கவும் முக்கியமான கனிம சந்தையில் அதுபெரும் பங்கைப் பெற ஆர்வமாக உள்ளது. குறிப்பாக 2070க்குள் நிகர-பூஜ்ஜிய உமிழ்வை அடைவதை இந்தியா தனது இலக்காகக் கொண்டிருப்பதால், கனிம வளம் நிறைந்த பகுதிகளைக் கண்டறிவதும் கட்டுப்படுத்துவதும் இந்தியாவிற்கு மிகவும் முக்கியமானவை.

உலகளாவிய - முக்கியமான - கனிமங்கள் சந்தையில் ஆதிக்கம் செலுத்துவதற்கான பரந்த முயற்சியின் ஒரு பகுதியாக இந்தியப் பெருங்கடலில் சீனாவின் ஆராய்ச்சி நடவடிக்கைகளை இந்தியா அதிருப்தியுடன் உணர்கிறது.

உலகப் பொருளாதாரத்தை இயக்கும் தொழில்நுட்பங்களுக்கு முக்கியமாகத் தேவையானது கனிமங்கள்.

சீனா தற்போது உலகில் கோபால்ட் கனிமத்தில் 70 சதவீதத்தையும், லித்தியம் மற்றும் மாங்கனீஸில் 60 சதவீதத்தை கட்டுப்படுத்துகிறது.

பதிலுக்கு, புதுடில்லி இந்தப் பிராந்தியத்தில் - கடற் பிரதேசத்தில் - தனது வலுவான இருப்பை நிலைநிறுத்தவும், அதன் ஆற்றல் மாற்றத்தைப் பாதுகாக்கவும் மற்றும் பெய்ஜிங்கின் செல்வாக்கை எதிர்க்கவும் உறுதியாக உள்ளது. அந்த இரு தரப்பு உரசலின் சூட்டை இலங்கை எதிர் கொள்ள வேண்டியிருக்கும் என்பது தவிர்க்க முடியாத இக்கட்டுத்தான்.

# ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பதில் உடன்பாடில்லை என்கிறார் சீமான்




"ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பதில் எனக்கு உடன் பாடில்லை. இங்கு நாடாளுமன்றம், சட்டப்பேரவைக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது சாத்தியமற்றது."

– இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங் கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

நாம் தமிழர் கட்சியின் இராமநாதபுரம் மாவட்ட கலந் தாய்வுக் கூட்டம் ராமநாதபுரம் அருகே பட்டணம்காத்தானில் உள்ள திருமண மஹாலில்நேற்று நடைபெற்றது. இக்கூட்டத் தில் பங்கேற்ற கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கை யில்,

"தி.மு.கவில் கொத்தடிமையாக ஒரு கூட்டத்தை உரு வாக்கி வைத்துள்ளனர். அதில் மூத்தவர்களே உதய நிதியை துணை முதல்வராக வேண்டும் என சொல்ல வைக் கின்றனர். யார் மதுவை ஒழிப்பார்களோ அவர்களுடன் திருமாவளவன் கூட்டணி வைத்திருந்தால் அது சரியாக இருந்திருக்கும். அப்படியில்லாமல் அந்தக் கூட்டணியில் அவர் சிக்கிக் கொண்டார். ஆனால், அவரது மது ஒழிப்பு நோக்கத்தை விமர்சிக்க முடியாது.

ஆட்சியில் பங்கு கேட்பது தவறில்லை. விடுதலை சிறுத் தைகள், கொம்யூனிஸ்ட் கட்சிகள், ம.தி.மு.க, இஸ்லாமிய அமைப்புகளின் வாக்குகள் இல்லாமலா தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தது? எல்லோருடைய வாக்குகள் வேண்டும், ஆனால், அதிகாரத்தில் மட்டும் பங்கு கொடுக்க மறுக்கின் றனர். தி.மு.க. மட்டும் மத்திய கூட்டணியில் ஆட்சியில் பங்கு கேட்கிறது. மத்திய கூட்டணி ஆட்சியில் 18 ஆண்டுகள் தி.மு.க. பதவி வகித்துள்ளது.

தி.மு.க, அ.தி.மு.கவுக்கு விவசாயிப் பற்றியோ , விவசா யத்தைப் பற்றியோ அருமை தெரிவதில்லை. அரசுக்கு தெரியாமலா பொலிஸ் போதைப் பொருள்களை விற்க அனுமதிக்கிறது? அரசு தான் போதைப்பொருள் விற்க அனுமதிக்கிறது. கஞ்சா, அபின் மட்டுமா போதைப்பொருள், டாஸ்மாக்கில் விற்கப்படும் மதுவும் போதைப்பொருளே. தற்போது இலங்கை அரசு இராமேஸ்வரம் மீனவர்களை மொட்டை அடித்து அனுப்பியுள்ளது. இது நாட்டின் பிரதமர், வெளியுறவுத்துறை அமைச்சருக்கு அவமானமாக தெரிய வில்லையா?

கச்சதீவை முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி, தாந்தோன் றித்தனமாக இலங்கைக்கு தாரை வார்த்தார். ஆனால், அப்போதைய இராமநாதபுரம் எம்.பி-யான மூக்கையாத் தேவர் மட்டுமே நாடாளுமன்றத்தில் அதற்கு கண்டனம் தெரிவித்தார். அப்போது ஆட்சியில் இருந்த தி.மு.க. ஒரு போராட்டம்கூட நடத்தவில்லை. ஒருமுறை எங்களிடம் ஆட்சியை கொடுத்துப்பாருங்கள். என் மீனவரை யாரும் தொட்டுவிடமுடியுமா?

ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பதில் எனக்கு உடன்பாடில்லை. இந்தியா ஒரே நாடல்ல. பல மொழி, பல கலாச்சாரம் என பன்முகைத்தன்மை கொண்ட நாடு. ஏன் வடமாநிலங்களில் பல கட்டங்களாக தேர்தல் நடத்துகின்றனர்? தேசியத்தை, தேசிய ஒருமைப்பாட்டை பற்றி பேச பா.ஜ.கவுக்கு தகுதி யில்லை."– என்றார்.

# ஆந்திர அரசுக்கு மத்திய அரசின் முழுமையான ஆதரவு உள்ளது

## முதல்வர் சந்திரபாபு நாயுடு தெரிவிப்பு



ஆந்திரப் பிரதேசத்தில் மக்கள் நலத்திட்டங்களை சிறப் பாக செயல்படுத்துவதிலும் மாநிலத்தை வளர்ச்சிப் பாதை யில் இட்டுச் செல்வதிலும் மத்திய அரசின் முழு ஆதரவு உள்ளதாக முதல்வர் சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சந்திரபாபு நாயுடு வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

"மத்தியிலும் மாநிலத்திலும் மக்களுக்கான அரசாங்கங்கள் உள்ளன. இவை மக்கள் நலன் மற்றும் வளர்ச்சியில் அர்ப் பணிப்புடன் கூடிய முடிவுகளை எடுக்கும் அரசாங்கங்கள்.

ஆந்திரப் பிரதேசத்தில் மக்கள் நலத்திட்டங்களை சிறப் பாக செயல்படுத்துவதற்கும், மாநிலத்தை வளர்ச்சிப் பாதை யில் இட்டுச் செல்வதற்கும் தெலுங்கு தேசம் கட்சி தலைமை யிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு எடுக்கும் அனைத்து முடிவுகளுக்கும் மத்திய அரசு முழு ஆதரவு அளித்து வருகிறது. இதன் காரணமாக அரசு எடுக்கும் முடிவுகள் விரைவாக செயல்படுத்தப்படுகின்றன.

100 நாள்களில் 100 இற்கும் மேற்பட்ட நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்திய நல்லாட்சி இது. கடந்த அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளுக்கும், அடக்குமுறைக் கொள்கைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு, மக்களுக்கு கருத்துச் சுதந்தி ரத்தை மீண்டும் கொண்டு வந்த அரசாங்கம் இதுவாகும். அதனால் தான் நல்லாட்சி அரசு." – என்று குறிப்பிட்டுள் ளார்.




# மத்திய கிழக்கில் உள்ள இரு நாடுகளுக்கான விமான சேவைகளை ரத்து செய்தது பிரான்ஸ்

மத்திய கிழக்கில் உள்ள முக்கிய இரண்டு நாடுகளுக்கு இடையிலான விமான சேவைகளை ஏர் பிரான்ஸ் ரத்து செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் தொடர்ந்து அதிகரித்து வரும் பதற்றங்கள் காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஏர் பிரான்ஸ் நிர்வாகம் விளக்கமளித்துள்ளது.

இதன் படி, இஸ்ரேலின் டெல் அவிவ் மற்றும் லெபனானின் பெய்ரூட் ஆகிய நகரங்களுக்கிடையிலான விமான சேவைகளே இவ்வாறு ரத்து செய்யப்பட்டுள்ளன.

மேற்படி பிரதேசங்களின் நிலைமைகள் கண்காணிக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் விமான சேவைகள் ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், இஸ்ரேலின் மொசாட் உளவு அமைப்பினால் லெபானான் முழுவதிலும் ஹிஸ்புல்லாக்களை இலக்காக கொண்டு பேஜர் வெடிப்பு தாக்குதல் ஒன்று நடத்தப்பபட்டது.

அதில், ஒன்பது பேர் உயிரிழந்ததுடன் 2000 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர்.

இதன் காரணமாக லெபனானின் செயற்பட்டு வரும் ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேலுக்கு பதிலடி நிச்சயம் என அறிவித்துள்ள நிலையில், மத்திய கிழக்கில் மீண்டும் பதற்றம் அதிகரித்துள்ளது.

# லெபனான் வெடிப்புச் சம்பவங்கள் போர்க் குற்றமாக கருதப்பட வாய்ப்பு








லெபனானில் தொலைத் தொடர்பு கருவிகள் வெடித்த சம்பவங்கள், போர் சட்டங்களை மீறிய செயற்பாடாகக் கருதப்படலாம் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

லெபனானில் 2 ஆவது தடவையாகத் தொலைத் தொடர்பு கருவிகள் வெடித்ததில் 32 பேர் உயிரிழந்ததுடன் 450 பேர் காயமடைந்தனர்.

கடந்த செவ்வாய் கிழமை லெபனானில் பேஜர் கருவில் வெடித்ததில் 12 பேர் உயிரிழந்ததுடன், 2,800 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த சம்பவங்களுடன் இஸ்ரேல் தொடர்புபட்டுள்ளதாக லெபனானில் இயங்கும் ஹெஸ்புல்லா அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது. எனினும் இஸ்ரேல் இதற்கு எந்தவித பதிலும் அளிக்கவில்லை.

இவ்வாறான பின்னணியில் இந்த செயற்பாடு திட்டமிடப்பட்ட தாக்குதலாக இருக்குமாயின் அது போர்க் குற்றமாகக் கருதப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வெடிப்பு சம்பவங்களில் சிறுவர்கள் உட்பட பொது மக்கள் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்துள்ளமையை நிபுணர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதேவேளை, ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ள பாலஸ்தீனப் பகுதியில் இஸ்ரேல் சட்டவிரோதமாக இருப்பதை ஓராண்டுக்குள் நிறுத்தக் கோரும் தீர்மானம் ஒன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக 124 உறுப்பு நாடுகளும், எதிராக 14 நாடுகளும் வாக்களித்துள்ளன.

அதேநேரம் 43 நாடுகள் வாக்களிப்பிலிருந்து விலகியிருந்தன என தெரிவிக்கப்படுகிறது.



# 24 மணித்தியாலங்களில் நான்கு சூட்டுச் சம்பவங்கள்

## மூவர் உயிரிழப்பு; இருவர் காயம்

குருநாகல், ரஸ்நாயக்கபுர பகுதியில் அடையாளந்தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த துப்பாக்கி பிரயோகத்தில் 30 வயதுடைய நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலைக்கு முன்னர் 24 மணித்தியாலங்களில் இடம்பெற்ற நான்காவது துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இதுவாகும்.

ஏனைய துப்பாக்கி பிரயோக சம்பவங்கள் கொஹுவல, தங்காலை மற்றும் மிதிகம பிரதேசங்களில் பதிவாகியுள்ளன.

இந்தத் துப்பாக்கி பிரயோக சம்பவங்களில் மூவர் உயிரிழந்துள்ளமையுடன் இருவர் காயமடைந்துள்ளனர்.

இலங்கையில் இடம்பெறவுள்ள தீர்மானமிக்க தேர்தலுக்காக அனைத்து பாதுகாப்பு பிரிவினரும் கடமையில் கவனம் செலுத்தி வரும் நிலையில் பாதாள கொலைகள் அதிகளவில் பதிவாகி வருவது அவதானமான ஒரு சூழலை ஏற்படுத்தி வருகிறது.

**களுபோவிலை துப்பாக்கிச் சூடு**

மோட்டார் சைக்கிளில் வருகைத் தந்த இருவர் நேற்று முன்தினம் இரவு 10.45க்கு களுபோவிலை சரணங்கர பாதையில் ஹோட்டல் உரிமையாளர் ஒருவரை ஹோட்டலினுள் வைத்து சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

இவ்வாறு கொலை செய்யப்பட்டவர் தெஹிவளை களுபோவிலை சரணங்கர பாதையில் காணப்படும் ஹோட்டலில் உரிமையாளரும் களுபோவிலை கடவத்தை பகுதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாயகம் விஸ்வநாதன் என்பவர் ஆவார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த கொலையாளிகள் இருவரும் ஹோட்டலினுள் சென்று ஹோட்டல் உரிமையாளரைத் துப்பாக்கியால் சுட்டு விட்டு மீண்டும் மோட்டார் சைக்கிளில் பாமன்கடை பகுதிக்குத் தப்பிச் சென் றுள்ளார்.

கொலை செய்தவர்கள் பயன்படுத்தியது எனச் சந்தேகிக்கப்படும் டிஸ்கவரி வகையைச் சேர்ந்த மோட்டார் சைக்கிளை அவர்கள் ஹெவ்லொக் பல்பொருள் அங்காடிக்கு அருகில் விட்டுச் சென்றுள்ளனர் என கொஹுவலை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்ட நபர் தற்போது வெளிநாட்டில் உள்ள போதைப்பொருள் கடத்தல் குற்றவாளியான கொம்பனிகே சானக்க அசங்க பொன்சேகா எனப்படும் படோவிட்ட அசங்கவின் நெருங்கிய நண்பர் என்பது மேலதிக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# தேர்தல் கடமைகளுக்காக கடிதங்களை பெற்ற உத்தியோகத்தர்கள் பணிக்கு செல்லவேண்டும்

தேர்தல் கடமைகளுக்காக நியமனக்கடிதங்களை பெற்ற அனைத்து உத்தியோகத்தர்களும் பணிக்குச் சமுகமளிக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் தினத்தன்று மேற்படி நியமனக்கடிதங்களை மாற்றுவதும் இரத்து செய்வதும் தண்டனைக்குரிய குற்றம் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், உத்தியோகப்பூர்வ வாக்காளர் அட்டைகளைப் பெறாத வாக்காளர்கள் உரிய தபால் அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

தேவைப்படும் பட்சத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகப்பூர்வ இணையத்தள பக்கத்தில் வாக்காளர் அட்டைகளைப் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



# தேர்தல் விடயம் தொடர்பாக 108 சந்தேக நபர்கள் கைது

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட திலிருந்து இதுவரையில் தேர்தல் தொடர்பான சட்டவிரோத நடவடிக்கை களில் ஈடுபட்ட 108 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், சட்டவிரோதமாக பயன்படுத் தப்பட்ட 14 வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 464 ஆகும்.

இதில் 48 குற்றப் புகார்களும், தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்ப ான 316 புகார்களும் அடங்கும்.

சட்டவிரோதமாக ஒட்டப்பட்டிருந்த 6,662,676 சுவரொட்டிகள் அகற்றப்பட் டுள்ளன எனவும் மேலும் 219,203 சுவரொட்டிகள் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளன எனவும் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

1,609 சட்டவிரோத பனர்கள் அகற்றப்பட்டன எனவும், மேலும் 1,176 பதாகைகள் பொலிஸ் தடுப்புகாவலில் எடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.

1,613 சட்டவிரோத கட்அவுட்கள் (பதாகை) அகற்றப்பட்டுள்ளமையுடன் 1,632 சட்டவிரோத பனர்கள் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# தேர்தல் கடமைகளுக்காக 1,358 பஸ்கள் சேவையில்!

இந்த ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய தேர்தல் கடமைகளுக்காக 1,358 பஸ்கள் வழங்கப்பட உள்ளன என இலங்கைப் போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

மாவட்ட தேர்தல் அலுவலகங்களின் ஊடாக விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைய இந்த பஸ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக அதன் பிரதி பொது முகாமையாளர் பண்டுக ஸ்வர்ணஹன்ச தெரிவித்தார்.

மேலும் தேர்தல் தொடர்பான பொலிஸ் பணிகளுக்காக 175 பஸ்கள் வழங்கப்பட உள்ளன.

இதேவேளை, வாக்களிப்பதற்காக கிராமங்களுக்குச் செல்லும் மக்களின் வசதிக்காக இன்றும் நாளையும் விசேட தொலை தூர பஸ் சேவைகளை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கைப் போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 20.09.2024




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. பொறுப்புகள் அதிகமாகும். இது உங்களுக்கு சுமையாக இருக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். எனவே உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும். அவ்வாறு செய்யவில்லையெனில் பணிகள் பாதியில் நிற்கும்.

உங்கள் அகந்தைப் போக்கை தவிர்ப்பது நல்லது. அதன் மூலம் உங்கள் துணையை மகிழ்விக்கலாம். அனுசரித்துப் போவதன் மூலம் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. அதிக பொறுப்புகளை எற்றுக் கொள்வது பற்றி கவலைப்படுவீர்கள்.

பதட்டம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. தூக்கமின்மைபாதிப்பும் ஏறபட வாய்ப்புள்ளது.




இன்று நீங்கள் நல்ல மனநிலயில் இருப்பீர்கள். நீங்கள் எந்த முடிவெடுத்தாலும் அது உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள நல்ல வாய்ப்பு உள்ளது. உது உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

நீங்கள் உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நீங்கள் பணம் சேமிப்பீர்கள். ஊக்கத் தொகை வகையில் பண வரவு காணப்படும்.

நீங்கள் பூரண ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருகாது. உங்களிடம் ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும்.




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். இன்றுநீங்கள் உறுதியான மனநிலையில் இருப்பீர்கள். நீங்களாக முடிவெடுப்பீர்கள்.

பணியைப் பொறுத்தவரை சிறப்பான நிலை காணப்படும். மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள். புதிய வாய்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு கொண்டிருப்பீர்கள். அன்பு பெருகி காணப்படும். இருவரும் ஒன்றாக இணைந்து மகிழ்வீர்கள்.

நிதிநிலைமை சீராக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. எனவே மகிழ்ச்சியுடன் இருக்க முயலுங்கள். பதட்டமான உணர்விற்கு வாய்ப்பு உள்ளது.

இன்று பணியிடச் சூழல் சாதகமாக இருக்காது. இன்று லாபம் நஷ்டம் இரண்டும் காணப்படாது. உங்கள் சகபணியாளர்களுடன் கவனமாக உறவாடவும்.

இன்று மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையுடன் பேசுவதை தவிர்ப்பது நல்லது.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். நீங்கள் சேமிப்பை உயர்த்த இயலாது.

அசௌகரியம் மற்றும் பதட்டம் காரணமாக இன்று நீங்கள் கால் மற்றும் தொடை வலியால் பாதிக்கப்படுவீர்கள்.




இன்று நீங்கள் பதட்டப்படலாம். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

நீங்கள் செய்யும் பணியும் முயற்சியும் வெற்றியைப் பெற்றுத் தராது. உங்கள் பணியில் மாற்றம் காண நேரலாம். அது உங்கள் விருப்பங்களை நிறைவேற்றும்.

நீங்கள் உங்கள் துணையுடன் வாக்குவாதம் செய்வீர்கள். மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்க்க வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் தேவையற்ற செலவுகளை செய்ய நேரும்.

உங்கள் குடும்ப நண்பர்களின் ஆரோக்கியத்திற்காக மருத்துவ செலவுகள் ஏறபடலாம். இது உங்களுக்கு சற்று கவலை ஏற்படுத்தும்.




இன்று புதிய நண்பர்களை பெறு வீர்கள். இதனால் உங்கள் சமூக வட்டாரம் விரிவடையும். நீங்கள் புகழடைவீர்கள். நல்ல நிலைமை அடைவீர்கள்.

நீங்கள் விஷயங்களை சகஜமாக எடுத்துக்கொண்டு உங்கள் பணிகளை முடிப்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் சிறப்பான உறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள். பரஸ்பர புரிந்துணர்வு காரணமாக உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்கள் சொத்துக்கள் அதிகரிக்கும். உங்கள் நிதிநிலைமையை சிறப்பாக வளர்த்துக் கொள்ள நல்ல வாய்ப்பு கிடைக்கும்.

இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். நம்பிக்கையும் உறுதியும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் காணப் படும். நீங்கள் பயனுள்ள முடிவுகளை எடுக்க இயலும். குறுகிய காலத்திற்குள் நீங்கள் உங்கள் பணிகளை திறமையாக முடிப்பீர்கள்.

நீங்கள் புதிய வாய்ப்புகளை பெறு வீர்கள். உங்கள் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் ஆரோக்கியமான உறவை பராமரிக்கும் மன நிலையில் இருப்பீர்கள்.

உங்கள் நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஊக்கத்தொகை வகையில் உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்களிடம் உற்சாகமும் ஆற்றலும் காணப்படும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாளாக அமையாது. நீங்கள் அதிக முயற்சி எடுக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப்படும். அதனை நீங்கள் அமைதியான முறையில் எற்றுக் கொள்ள வேண்டும். திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குழப்பமான மனநிலை காரணமாக இன்று நீங்கள் உங்கள் துணையுடன் ஆரோக்கியமான உறவு கொள்ள இயலாது.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படாது. அதிகரிக்கும் செலவினங்களை நீங்கள் எதிர்கொள்ள நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

இன்று சிறிது அசௌகரியமாக உணர்வீர்கள். இதனால் பதட்டம் ஏற்படும். ஆரோக்கியக் குறைவு காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 20.09.2024

**தனுசு**

உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்துகொள்வதற்கு பொதுவான இலக்கை நோக்கி செயல்படவும்.

அறிவார்ந்த முறையில் பணி செய்தால் மட்டுமே வெற்றி காண இயலும். அதன் மூலம் நீங்கள் உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் மோதல் ஏற்படலாம். இதனால் உறவில் புரிந்துணர்வின்மையும் குறைந்த நல்லிணக்கமும் காணப்படும்.நிதிநிலைமை சிறப்பாக காணப்படாது. கூடுதல் செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

இன்று நீங்கள் கால் வலியால் அவதிப்பட நேரலாம். உடற்பயிற்சி மேற்கொள்வதன் மூலம் சிறந்த பலன் காணலாம்.

**கும்பம்**

உங்கள் செயல்களை சுமூகமாக மேற்கொள்ள நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம். நீங்கள் நம்பிக்கை இழக்க நேரலாம். நீங்கள் உங்கள் தன்னம்பிக்கையை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சக பணியாளர்களுடன் கவனமாக உறவாட வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்ல உறவை வளர்த்துக் கொள்ள முயல வேண்டும். உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

நிதி நிலைமை சீராக இருக்காது. இன்று உங்கள் நிதிநிலையை பராமரிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

கண் எரிச்சல் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. மருத்துவரிடம் சென்று கண் பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.

**மகரம்**

இன்று நீங்கள் உங்கள் உண்மையான ஆற்றலை அறிந்து கொள்வீர்கள். உங்களின் தகவல் தொடர்பு திறமைக்கான பாராட்டுப் பெறுவீர்கள்.

நீங்கள் திறமையாகப் பணியாற்றுவீர்கள். உங்களிடம் காணப்படும் உறுதி உங்கள் வெற்றிக்கு உதவும். இன்று உங்கள் துணையுடன் நல்லுறவு கொள்வீர்கள். உங்கள் நடத்தையின் மூலம் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள்.

நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். இன்று உங்களிடம் அதிக பணம் காணப்படும்.நீங்கள் பணத்தை சிறப்பாக கையாள்வீர்கள்.இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களின் நம்பிக்கையான மனநிலை காரணமாக நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

**மீனம்**

இன்று உங்கள் அணுகுமுறையில் உறுதி வேண்டியது அவசியம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். அது உங்களுக்கு கவலை அளிக்கும். நீங்கள் பணிகளை திட்டமிட்டு முறையாக மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. வாக்குவாதங்கள் நிகழ வாய்ப்புள்ளது.

இன்று நிதி வளர்ச்சி காண சிறப்பான நாள் அல்ல. நீங்கள் செலவுகளை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் தாயின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இவ்வாறு எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.




